“கணக்கு போட்டு முடிச்ச பாஜ”

புதுச்சேரியில் 2 சீட்தான்

அதிமுகவுக்கு வந்த சோதனை

என்.ஆர் காங்கிரசிடம் இருந்தும் தொகுதிகள் பறிப்பு

புதுச்சேரி, ஜன. 31: புதுவையில் பாஜ, என்ஆர் காங்கிரஸ் கூட்டணி ஆட்சி நடந்தது வருகிறது. கடந்த தேர்தலின்போது, பாஜவுடன் கூட்டணி அமைத்தால் புதுவைக்கு மாநில அந்தஸ்து கிடைக்கும் என அறிவித்து என்ஆர் காங்கிரஸ் முதல்வர் ரங்கசாமி பிரசாரம் செய்தார். ஆனால் அது நிறைவேறாததோடு, பல்வேறு திட்டங்களுக்கும் ஒன்றிய அரசு துணை நிலை ஆளுநர் மூலம் முட்டுக்கட்டை போட்டது. இதனால், தேஜ கூட்டணியில் இருந்து விலகி தவெகவுடன் 2026 தேர்தலை சந்திக்க முதல்வர் ரங்கசாமி திட்டமிட்டு காய் நகர்த்தி வந்தார். இதுதெரிந்து மேலிடம் கடைசி நேரத்தில் சில நடவடிக்கைகளை எடுத்தது.

புதிதாக பாஜ தலைவரான நிதின் நபின், ஒன்றிய அமைச்சர் மன்சூர் மாண்டவியா ஆகியோர் ரங்கசாமியை சந்தித்து பேசினர். அப்போது பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் கூட்டணி தொடர வேண்டும் என விரும்புவதாக தெரிவித்து அவரை பணிய வைத்தனர். மேலும், புதுவையின் தேர்தல் பொறுப்பாளர் சுரானா, பாஜ தலைவர் ராமலிங்கம், சபாநாயகர் செல்வம், அமைச்சர் நமச்சிவாயம் ஆகியோரும் தொடர்ந்து ரங்கசாமியுடன் பேசி வந்தனர். இதில் முடிவு எட்டப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

கடந்த தேர்தல் போன்று என்.ஆர். காங்கிரசுக்கு 16 தொகுதிகள், பாஜவுக்கு 10 தொகுதிகள், அதிமுகவுக்கு 2 தொகுதிகள், லட்சிய ஜனநாயக கட்சியை தொடங்கிய லாட்டரி அதிபர் மார்ட்டின் மகன் சார்லசுக்கு 2 தொகுதி ஒதுக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. ஆனால், கூட்டணியில் உள்ள அதிமுக தங்களுக்கு கடந்த தேர்தலைப் போலவே 5 தொகுதி தர வேண்டும், குறைந்தபட்சம் 3 தொகுதி வேண்டும், 2 தொகுதியை ஏற்க முடியாது என தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. பாஜவை சேர்ந்த 3 பேர் நியமன எம்எல்ஏக்களாக உள்ளனர். இதில் ஒரு எம்எல்ஏ பதவியை என்ஆர். காங்கிரசுக்கு விட்டுத் தர முடிவு செய்யப்பட்டுள்ளது.

> **கூட்டணியில் உள்ள அதிமுக தங்களுக்கு கடந்த தேர்தலைப்போலவே 5 தொகுதி தர வேண்டும், குறைந்தபட்சம் 3 தொகுதி வேண்டும், 2 தொகுதியை ஏற்க முடியாது என தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.**

இது குறித்து பாஜ மூத்த நிர்வாகி கூறும்போது, ‘கடந்த சட்டமன்ற தேர்தலின்போது என்.ஆர்.காங்கிரசுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகள் மீண்டும் வழங்கப்படுகிறது. இதில் அவர்கள் போட்டியிட்ட ஓரிரு தொகுதிகள் மட்டும் மாற்றம் இருக்கும். அதன்படி என்.ஆர். காங்கிரஸ் தொகுதியான ராஜ்பவன் தொகுதியில் பாஜ தலைவர் ராமலிங்கம் போட்டியிடுகிறார். மற்றொரு தொகுதியிலும் மாற்றம் வருகிறது. இதுபோன்று லாட்டரி அதிபர் மகன் சார்லசுக்கு காமராஜர், நெல்லித்தோப்பு தொகுதி ஒதுக்கப்படுகிறது’ என்றார். இதுகுறித்து அமைச்சர் லட்சுமிநாராயணனிடம் கேட்டபோது, ‘என்.ஆர். காங்கிரசுக்கு 16 தொகுதிகள் ஒதுக்கப்படும் என தெரிகிறது. ஆனால் ராஜ்பவன் தொகுதி குறித்து இதுவரை பேச்சு நடத்தவில்லை. வேறு எந்த தொகுதியிலும் நான் நிற்க மாட்டேன். முதல்வர் ரங்கசாமி என்ன சொல்கிறாரோ அதன்படி நடப்பேன்’ என்றார்.

டெல்லி செல்கிறார் ரங்கசாமி

புதுவை வருகிறார் மோடி

என்.ஆர்.காங்கிரஸ்-பாஜ மற்றும் அதிமுகவுடன் யார் யாருக்கு எத்தனை சீட்டுகள் என்பதை முடிவு ஆகி உள்ளது. ஆனால் இதற்கான முறையான அறிவிப்பு வெளியாகவில்லை. இதற்கிடையில் முதல்வர் ரங்கசாமி அடுத்த மாதம் 2வது வாரத்தில் டெல்லி செல்கிறார். அங்கு ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், உள்துறை அமைச்சர் அமித்ஷா மறறும் பிரதமர் மோடியை சந்திக்கிறார். அப்போது புதுவையில் புதிய திட்டங்களுக்கு அதிகமான நிதியுதவியை கேட்கிறார். இதற்கு கிரீன் சிக்னல் கிடைத்தவுடன், புதுவை திரும்புகிறார். பின்னர் அமித்ஷா, புதுவைக்கு வந்து சென்றவுடன் பிரதமர் மோடி புதுவைக்கு வருகிறார் என பாஜ தரப்பில் தகவல் வெளியாகி உள்ளது.

காந்தி-ஜீவா நினைவு அரங்கம் குன்றக்குடி அடிகளார் சிலை

▶ சுதந்திர போராட்ட காலத்தில், சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், சிராவயல் கிராமத்தில் காந்தி-ஜீவா சந்திப்பின் நினைவாக ரூ.3.27 கோடி செலவில் அவர்களது சிலைகளுடன் அமைக்கப்பட்ட நினைவு அரங்கத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். உடன், அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், கே.ஆர்.பெரியகருப்பன், மு.பெ.சாமிநாதன், ராஜகண்ணப்பன், மெய்யநாதன், முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம், இந்திய கம்யூ. மாநில செயலாளர் வீரபாண்டியன், மற்றும் அதிகாரிகள்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

காரைக்குடி, ஜன.31: முதல்வர் மு.க.ஸ்டாலின் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க 2 நாள் சுற்றுப்பயணமாக நேற்று சிவகங்கை மாவட்டத்துக்கு வந்தார். சிராவயலில் சுதந்திரப் போராட்டத்தின் போது காந்தியடிகள் - ஜீவா ஆகியோர் சந்தித்து பேசியதன் நினைவாக, ரூ.3.27 கோடியில் 0.20 ஹெக்டர் நிலத்தில் நினைவு அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. அரங்கத்தில் மகாத்மா காந்தியடிகள் - தோழர் ஜீவானந்தம் பேசுவதுபோல வெண்கல சிலை நிறுவப்பட்டுள்ளது. அரங்கத்தையும், சிலையையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று மாலை திறந்து வைத்து, அவர்களது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். பின்னர் நினைவு அரங்கத்தை பார்வையிட்டார். அப்போது தோழர் ஜீவாவின் குடும்பத்தினரை சந்தித்து பேசினார்.

ஜீவா அரங்கை தொடர்ந்து குன்றக்குடியில் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாச்சாரிய சுவாமிகளுக்கு ஆளுயர திருவுருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. அதனை திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின், மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தினார். முன்னதாக குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு வெள்ளி செங்கோல் கொடுத்து வரவேற்றார். குன்றக்குடி அடிகளார் சிலைக்கு மரியாதை செலுத்திய பிறகு, குன்றக்குடி மடத்திற்கு சென்ற முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. மடத்திற்குள் சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின், அங்கு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அறைக்கு சென்று அவருடன் சிறிது நேரம் பேசினார்.

பின்னர் அங்கிருந்து காரைக்குடிக்கு வந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் கழனிவாசல் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வீறு கவியரசர் முடியரசனார் சிலையை திறந்துவைத்து அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

பின்னர் வீறுகவியரசர் முடியரசனார் சிலையின் முன்பு அமைச்சர்கள் மற்றும் முடியரசனார் குடும்பத்தினார் அனைவருடன் சேர்ந்து குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

திமுக கூட்டணியில் புதிய கட்சிகள்

கனிமொழி தகவல்

நெல்லை, ஜன.31: திமுக கூட்டணிக்கு புதிய கட்சிகள் வரும் என்று கனிமொழி தெரிவித்தார்.

திமுகதுணைப்பொதுச் செயலாளர் கனிமொழி எம்பி நெல்லையில் நேற்று அளித்த பேட்டி: திமுக தேர்தல் அறிக்கை மீது மக்கள் மிகுந்த நம்பிக்கையுடன் உள்ளனர். அதன் அடிப்படையில் தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவிடம் அவர்களது கருத்துக்களை பகிர்ந்து கொண்டுள்ளனர். அடுத்து திமுக தான் ஆட்சி அமைக்கும். அவர்கள் ஒரு வாக்குறுதியை கொடுத்தால் நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கையோடு மக்கள் உள்ளனர். திமுக கூட்டணிக்கு மேலும் புதிய கட்சிகள் வருவதற்கு வாய்ப்புகள் உள்ளன. ஆனால் புதிய கட்சிகள் எவை என்பதை முதல்வர் முடிவு செய்வார். கருத்துக்கணிப்புகள் திமுகதான் ஆட்சியமைக்கும் என்று வந்தாலும், வராவிட்டாலும், தேர்தல் களம் திமுக கூட்டணிக்கு தான் சாதகமாக உள்ளது. நான், ராகுல் காந்தியை சந்தித்து பேசினேன். எனினும் கூட்டணியை இறுதி செய்வதற்காக இல்லை. ஏனெனில் பல ஆண்டுகளாக காங்கிரஸ் திமுக கூட்டணியில் தான் உள்ளது. இவ்வாறு கனிமொழி எம்பி தெரிவித்தார்.

‘ராகுல்காந்தியை சந்திக்க முகத்தை மூடி போகவில்லை’

தூத்துக்குடி விமான நிலையத்தில் கனிமொழி எம்பி அளித்த பேட்டி: தேமுதிகவுடன் கூட்டணி சம்பந்தமாக நான் எதுவும் பேசவில்லை. கூட்டணி உறுதியாக இருந்தால் முதலமைச்சர் அறிவிப்பார். டெல்லியில் நான் ராகுல்காந்தியை சந்திக்கும் போது முகத்தை மூடிக்கொண்டு போகவில்லை. நேரடியாகதான் சென்றேன். நாடாளுமன்றத்திற்கு செல்லும்போது கூட்டணி கட்சி தலைவரை சந்திப்பதில் எந்த தவறும் இல்லை. யார் யாருக்கு அடிமை என்று எடப்பாடி பழனிசாமிக்கு தெரியும் என்றார். வரலாற்றில் முதல்முறையாக ஞாயிற்றுக்கிழமை நாடாளுமன்றம் கூடுகிறது என்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு? பாஜ ஆட்சியில் எதையும் நாம் எதிர்பார்க்கலாம் என்றும் குறிப்பிட்டார்.

மோடியின் கொத்தடிமை எடப்பாடி

வைகோ பாய்ச்சல்

நாகப்பட்டினம், ஜன.31: நாகப்பட்டினத்தில் நேற்று நடந்த திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மதிமுக பொதுச்செயலாளர் வைகோ நிருபர்களுக்கு அளித்த பேட்டி: திமுக கூட்டணியில் விரிசல்கள் ஏதுமில்லை. வரும் சட்டமன்ற தேர்தலில் இந்தியா கூட்டணி திமுக தலைமையில் 200 தொகுதிகளில் வெற்றி பெறும். அறுதி பெரும்பான்மையுடன் திமுக ஆட்சி அமைத்து 2வது முறையாக மு.க.ஸ்டாலின் முதல்வரவார். அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, மோடிக்கு கொத்தடிமையாக இருந்து வருகிறார். தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி பதவியேற்ற நாள் முதல் ஆர்எஸ்எஸ் இயக்கத்தின் ஏஜென்டாக செயல்பட்டு வருகிறார். வஞ்சகத்தோடு செயல்படும் ஆளுநர் பதவியில் நீடிக்க கூடாது. அவரது பதவியை அகற்ற வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

THE TAMILNADU DR.M.G.R.MEDICAL UNIVERSITY
No. 69, ANNA SALAI, GUINDY, CHENNAI – 600 032

Ref.No.SI(1)/16620/2024 Dated:30.01.2026

“பொது அறிவிப்பு”

இதன்மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுவது என்னவெனில், தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் (SEIAA), தமிழ்நாடு M/s தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்திற்கு 23.01.2026 அன்று சுற்றுச்சூழல் அனுமதி (Environmental Clearance EC) சான்றிதழை வழங்கியுள்ளது. இதற்கான கடித எண் : File No.: 13034 மற்றும் EC எண் : EC25C3804TN5560826N தேதி : 23.01.2026 ஆகும்.

மேற்கண்ட சுற்றுச்சூழல் அனுமதி சென்னை மாவட்டத்தில் அடையார் கிராமம், கிண்டி தாலுகா T.S.No.1 (பகுதி), பிளாக் எண்.6 இல் “**புதிய 750 படுக்கைகளுடன் கூடிய குழந்தைகளுக்கான உயர்சிறப்பு மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையை கட்டட கட்டுமானம்**” என்ற திட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.

SEIAA, தமிழ்நாடு வழங்கிய சுற்றுச்சூழல் அனுமதி சான்றிதழ்,SEIAA, TN (PARIVESH) அதிகாரப்பூர்வ இணையதளத்தில் காணக்கிடைக்கிறது. மேலும், அந்த அனுமதி சான்றிதழின் நகல் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம், சென்னை (TNPCB) அலுவலகத்திலும் கிடைக்கிறது.

DIPR/123/வரைகலை/2026 பதிவாளர் (மு.கூ.பொ)

கோயம்புத்தூர் மாநகராட்சி
ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். e19/2026 நாள் 29.01.2026
15வது மத்திய நிதிக்குழு மானியம் - திடக்கழிவு மேலாண்மை நிதி 2025-26 (Two Cover System)

1. கோயம்புத்தூர் மாநகராட்சி- மின்சார இலகுரக வாகனம் கொள்முதல் செய்தல் **15வது மத்திய நிதிக்குழு மானியம் - திடக்கழிவு மேலாண்மை நிதி 2025-26** நிதியின் கீழ் ஒப்பந்தப்புள்ளிகள் **இரு உறைகள்** முறையில் வரவேற்கப்படுகின்றன.
2. மொத்த மதிப்பீட்டுத் தொகை **ரூ.2574 இலட்சம்.**
3. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரிகளிலிருந்து இலவசமாக இறக்கம் செய்து கொள்ளலாம்..
4. இப்பணிகள் தொடர்பான கூடுதல் விவரங்கள் மற்றும் நிபந்தனைகளை கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலகத்தில் பெறலாம்.
5. **இப்பணி சம்பந்தமான நாள் மற்றும் நேரம் :**

1.	ஒப்பந்தப்புள்ளிக்கு முன் கலந்தாய்வு கூட்டம்	**06.02.2026** காலை **11.00** மணி
2.	ஒப்பந்த நமூனா பதிவிறக்கம் செய்தல்	**16.02.2026** மாலை **3.00** மணி
3.	ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல்	**16.02.2026** மாலை **3.00** மணி
4.	தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் திறத்தல்	**17.02.2026** மாலை **4.00** மணி

6. ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டிருப்பின் அதற்கு அடுத்த நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும்.

ஆணையாளர், கோவை மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர்-641001.
தொலைபேசி எண். 0422 2396026. Email: commr.coimbatore@tn.gov.in

செ.ம.தொ.இ./618/ஒப்பந்தப்புள்ளி/2026 **ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி.**

தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தூத்துக்குடி மாவட்டம்
அ1/7230/2026, நாள்: 29.01.2026
(குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி)

1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in இணைய தள முகவரியினைப் பார்வையிடவும்.
2. தூத்துக்குடி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, இணை இயக்குநர்/திட்ட இயக்குநர் (மு.கூ.பொ.) அவர்களால், 2026–27–ஆம் ஆண்டிற்கான அனைத்து வட்டாரங்களுக்குத் தேவைப்படும் இரும்புக் கம்பிகள் 8 mm மற்றும் 10 mm கொள்முதல் செய்தல் பணிக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் (இரட்டை உறை முறை) வரவேற்கப்படுகிறது.
3. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை www.tntenders.gov.in என்ற இணைய தள முகவரியில் கட்டணம் ஏதுமின்றி 31.01.2026 முதல் 06.02.2026 வரை எடுத்துக் கொள்ளலாம்.
   1. மின்னணு ஒப்பந்த நமூனா பதிவிறக்கம் செய்ய கடைசி நாள் மற்றும் நேரம் : 06.02.2026 மாலை 3.00 மணி வரை
   2. மின்னணு ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : 06.02.2026 மாலை 3.00 மணி வரை
   3. மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 06.02.2026 மாலை 4.00 மணி முதல்

செ.ம.தொ.இ.609/ஒப்பந்தப்புள்ளி/2026 இணை இயக்குநர்/திட்ட இயக்குநர்(மு.கூ.பொ.), மா.ஊ.வ. மு. தூத்துக்குடி.

தமிழ்நாடு அரசு
எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம், சென்னை 2.

ஆணையரக எண். க்யூ3/962/2026 மின் – ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை நாள்: 30. 01.2026

1) தமிழ்நாடு ஆளுநருக்காகவும் மற்றும் அவரது சார்பிலும் 2026 தேர்தலுக்கு **Four Colour Toner Based Digital Production Printer-1 No (as per Tender specification)** கொள்முதல் செய்வதற்கு விலை நிர்ணயம் குறித்து ஒப்பந்தம் ஏற்படுத்தவும் ஒப்பந்ததாரர்கள் / உற்பத்தியாளர்கள் / விநியோகஸ்தர்கள் / அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களிடமிருந்து மின்–ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளத்தின் மூலம் **https://tntenders.gov.in** எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் பொது மேலாளர் அவர்களால் வரவேற்கப்படுகிறது.

2) கொள்முதல் தொடர்பான முக்கியமான தேதி மற்றும் நேரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

வ.எண்	கொள்முதல் விவரம்	வழங்கப்பட வேண்டிய இடம்	மின் ஒப்பந்தப் புள்ளி வெளியிடப்படும் நாள்	முன் ஏலக் கூட்ட நாள்	மின் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள்
1.	Four Colour Toner Based Digital Production Printer-1 No வழங்குதல் நிறுவுதல் மற்றும் பராமரித்தல்	அரசு மைய அச்சகம், சென்னை–1	31.01.2026	05.02.2026	19.02.2026

2) மின்னணு ஒப்பந்தப்புள்ளிகளை **https://tntenders.gov.in** என்ற இணையதளம் வாயிலாக அனுகி பதிவேற்றம் செய்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ/604/ஒப்பந்தப்புள்ளி/2026 பொது மேலாளர்

‘பில்டப் பண்றமோ, பீலா விடுறமோ முக்கியமில்ல...’

வாய்ப்பில்லைன்னு எடப்பாடி சொன்னது பழைய செய்தி

குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டாத ஓபிஎஸ்

தேனி, ஜன.31: அதிமுகவில் சேர்க்க வாய்ப்பில்லை என எடப்பாடி பழனிசாமி கூறியது பழைய செய்தி என முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் கூறியுள்ளார்.

தேனி மாவட்டம், பெரியகுளம் அருகே கைலாசப்பட்டியில் உள்ள தனது பண்ணை வீட்டில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் நேற்று முன்தினம் அதிமுக தொண்டர் உரிமை மீட்புக் கழக மாவட்ட நிர்வாகிகள் மற்றும் ஆதரவாளர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினார்.

பின்னர் அவர், நிருபர்களிடம் கூறுகையில், “எதிரும், புதிருமாக இருந்த டிடிவி.தினகரனும், எடப்பாடி பழனிசாமியும் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்து இருக்கிறார்கள். அதிமுகவில் இணைய நான் ரெடி. இதற்கு டிடிவி.தினகரன் உதவ வேண்டும்” என தெரிவித்திருந்தார். முன்னதாக டிடிவி.தினகரனும், இத்தனை வருடமாக இருந்த அதிமுகவுக்கு ஓபிஎஸ் நன்றிக்கடனாக கூட்டணியில் இணைய வேண்டுமென தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து, அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியிடம், நிருபர்கள் கேள்வி எழுப்பியதற்கு, “பொதுக்குழுவில் எடுத்த முடிவின் அடிப்படையில் ஓ.பன்னீர்செல்வம் நீக்கப்பட்டிருக்கிறார். அவரை மீண்டும் அதிமுகவில் சேர்க்க வாய்ப்பில்லை” என தெரிவித்திருந்தார். எடப்பாடியின் இந்த பேச்சால், ஓபிஎஸ் மீண்டும் அதிமுகவில் சேர்வதற்கான வாய்ப்பில்லை என்றே தெரிகிறது. இந்த சூழலில் நேற்று, தேனி மாவட்டம் பெரியகுளத்தில் ஓ.பன்னீர்செல்வம், வீட்டில் இருந்து போடி தொகுதிக்கு புறப்பட்டார்.

அப்போது செய்தியாளர்கள், அவரிடம், “உங்களை அதிமுகவில் மீண்டும் சேர்க்க வாய்ப்பு இல்லை என எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளாரே” என கேட்டதற்கு, “அதெல்லாம் பழைய செய்தி” என ஒற்றை வரியில் கூறிவிட்டு காரில் புறப்பட்டுச் சென்றார். ஓபிஎஸ் இந்த பதிலை டிரால் செய்யும் நெட்டிசன்கள், ‘பில்டப் பண்றமோ, பீலா விடுறமோ முக்கியமில்ல... நாம என்ன செய்தாலும் இந்த உலகம் நம்மள உற்று பார்க்கணும்...” என்று கிண்டலடித்து வருகின்றனர்.

ஓபிஎஸ் சேர்ப்பா? இபிஎஸ் முடிவு

நழுவிய பாஜ

பாஜ தேசிய மகளிரணித் தலைவர் வானதி சீனிவாசன் கோவையில் நிருபர்களிடம் நேற்று கூறுகையில், “பாஜவில் எந்த தொகுதியில், யார் போட்டியிடுவது என்பதை டெல்லி தலைமை தான் முடிவு செய்யும். அடுத்த 40 நாட்கள் சட்டமன்ற தொகுதி வாரியாக சுற்றுப்பயணம் மேற்கொண்டு, மக்கள் பிரச்னைகளை கேட்டறியவும், தேர்தல் பணிகளை மேற்கொள்ளவும் சுற்றுப்பயண பொறுப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். எனக்கு 3 தொகுதிகளின் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. பொறுப்பு வழங்கப்பட்ட தொகுதியில் போட்டியிடுவேனா அல்லது வேறு தொகுதியில் போட்டியிடுவேனா என்பதை கட்சி முடிவு செய்யும் என்றார். கூட்டணியில் ஓபிஎஸ் சேர்க்கப்படுவாரா என்ற கேள்விக்கு, “தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தமிழக தலைவராக எடப்பாடி பழனிசாமி உள்ளார். எனவே ஓபிஎஸ்-ஐ இணைப்பது குறித்து அவர் தான் முடிவு செய்வார்” என்றார்.

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்
பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரினோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலகு: மாவட்டம்-சேலம் மேற்கு பதிவு மாவட்டம், சூரமங்கலம் சார் பதிவு அலுவலகம், கிராமம்-அழகாபுரம், பழைய S.No.104/2, புதிய பட்டா எண்.1720, S.No.104/6, மனை எண்.02, முதல்தளம், எஸ்பிசி பவன், 104/7, சேலம் புரடக்டிவிட்டி கவுன்சில், மணிவண்ணன் தெரு, புதிய பேருந்து நிலையம், சேலம், தமிழ்நாடு-636004.
மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 மற்றும் 9 கீழ் அசையா சொத்துகளின் மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப–கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது **க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்)** அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது.

கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் 03.03.2026 தேதி அன்று மின்–ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்– ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்–ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மாழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை ((நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த விண்ணங்கள்/ நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
1	கடன் எண்: HF0127H21100174 & HF0127H19100063 B சுந்தரி (கடன்தாரர்), வெண்ணிலா S (உப கடன்தாரர்)	கோரிக்கை அறிவிப்பு தேதி: 07.06.2025 மொத்த நிலுவைத் தொகை: 07.06.2025 தேதியின்படி ரூ.12,62,001/– (ரூபாய் பன்னிரண்டு லட்சத்து அறுபத்திரண்டாயிரத்து ஒன்று மட்டும்) இதில் HF0127H21100174 இன்படி ரூ.6,59,042/– & HF0127H19100063 இன்படி ரூ.6,02,959/– ஆகியவை அடங்கும். மேலும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு முறையே 18.35% & 15.85% வட்டி உள்ளடங்கும்.	கையக	சேலம் மாவட்டம், சேலம் பதிவு மாவட்டம், சேலம் மேற்கு இணை 1 சார் பதிவு அலுவலகம், சேலம் டவுன், F பிவிஷன், பழைய T.S.No.895, மறு சர்வே வார்டு J, பிளாக்.13, T.S.No.19,துணைப் பிரிவின்படி வார்டு Ah, பிளாக்.13, T.S.No.19/3 மற்றும் வார்டு Ah, பிளாக்.13, T.S.No.19/4 இல் உள்ள 324 ச.அடி பரப்பளவு உள்ள நிலம், ஆர்சிசி கட்டிடம் மற்றும் அனைத்து பயன்பாட்டு உரிமைகள் உள்ள சொத்த